படைப்பு குழுமம்

# மின் இதழ்


நாள்: 14-01-2018 பதிப்பு - 18



## கவிதைகளின் தொகுப்பு

# பூமியை ஒற்றை முலையென நினைத்து

பத்திரப்படுத்தப்பட்ட வெள்ளைச்சொல் ஒன்று
என்னை எழுப்புகிறது
பூமியை ஒற்றை முலையென நினைத்து
வேற்றுக்கிரகவாசியின் மகன்
விரல்களை நீட்டிய இரவு வெளுத்து விட்டது
கொக்கு விரட்ட வயல் வரப்புகளில்
ஓலமிடும் குழந்தைகள்
வைக்கோல் பொம்மைகளோடு
நாடகம் ஆடுகிறார்கள்
வைக்கோலின் வேதனை கால்சட்டைவழி
இறங்கி நடக்கும் வரப்புகளில்
நண்டுகள் இறந்த காலத்தின் விதைகளை ஆழப்புதைக்கின்றன
மிளகுச் சதையாய் துடிக்கும் மனம்
பொழுதுகட்டிச் செல்லும் சூரியனிடம்
கேள்விகளை உதிர்க்கிறது
சூரியனின் புலம்பல்களோ காலங்களையே தீய்க்கும் அளவுக்கு
தகிப்புடையது
தீ தொழிலுக்கு கூலி யார் தருவார்
தேசமெங்கும் பலதரப்பட்ட சிவப்புக் கறை
சூரியனின் தொப்புள்கொடிக்கு சினமேற்றுகிறது
இந்நேரம்
வேற்றுக் கிரக கன்னியொருத்தி
விரல்களை விட்டு
பனிக்காலத்தை இழுக்கக்கூடும்
வேம்படியில் மறைந்து கிடக்கிறது மிளகுச்சதை



**தேன்மொழி தாஸ்**

தனிமையில் உதிரும் சொற்கள்
மிகுந்த கணம் கொண்டவை
அடர்ந்த மௌனத்தின் இருப்பு
மனம் பிறழுந்த ஒருவன் தன்னை
எதிலும் முன்மொழியாது
தனக்குத்தானே கூவி
தனக்குத்தானே கேட்டு ரசிக்கும்
குயிலின் பெருமூச்சை போன்றது

சலனமற்று கிடக்கிறது கடல்
அவ்வப்போது பாறைமோதும் சிறு அலைகள்
உன் பெருமூச்சை ஒத்தது
இடது மார்படியில் கருத்த மச்சம்
அதன்மேல் உதடுகள் படிகிறது
இப்படித்தான்
நீயும் நானும் சலனமற்று மோதிக்கொள்கிறோம்

நான் மௌனத்தை பிரித்து
சொற்களை தேடிச்சென்று
ஏழு நூற்றாண்டுகள் ஆகியும்
தோற்றுவிட்டவன் நண்பா
படுகவனமாக பலூனை ஊதிக்கொண்டிருக்கிற
நீதான் அதை எவ்வளவு இலகுவாக கையாள்கிறாய் பாரேன்

**விேனாத்**



# சுடு கற்களின் வேக்காடு

இறுகிய மண்ணை குழைத்து
வசப்படுத்துவதில்
வரை படுகிறது வாழ்கை

அச்சேறும் எண்ணிக்கையில்
பால் சோறு மணக்க
வெடிப்பு விழும் கவளம்
கிண்டுகிறது களி

வெயில் வேண்டிய பிரார்த்தனை தட்டுகளில்
மழை வந்து
நீர் கரத்தால்
மண்ணள்ளிப் போட
கிடுகு ஓட்டைகளின் கீழ்
கொடுகுகின்றன கன்றிய குரல்கள்

உமி மூட்டைகளும் கனக்கின்ற காலம்
எஞ்சிய தரவுகளைக் கொண்டு
உலை ஏற்ற
பசியில் பற்றி உமிழ்ந்து
பற்றுகிறது தீ

பழுப்பேறிய வைரங்கள்
புகை பிடிக்க
கறுப்பென்ற புறக் கணிப்பால்
கழிபடுகிறது நிறக் கணிப்பு

செங்கல் சூளைகளை
காணும் போதெல்லாம்
வெந்து போகிறேன் நானும் ஒரு கல்லாய்

விளிம்பு நிலை மக்களிடம்
விலைபேச மனசு மறுக்கிறது
இனி எண்ணியிருக்கிறேன்
அவர்கள் கேட்கும் உருப்படி கூலியை விட
ஒரு சதமாவது
கூடுதலாக கொடுக்கலாமென்று.

ரோஷான் ஏ.ஜிப்ரி



கும்பிடாமல் போனாலும் குறுக்கே வருகிறாய்.
என் குலசாமி!
என்னதான் வேண்டும் உனக்கு.
வெட்கப்படாமல் கேள்!!

வானமெல்லாம் மேகம் திருத்தி
கங்கை பாய்ச்சி
அமுத விதைத்தூவ
கொஞ்சம் மண்கேட்டு
பூமி பார்த்து காத்திருக்கிறது வருணசேனை.
ஒரு பிடி மண்கூட
தரமாட்டேன் என்கிறான்
நெட்டிக் கிழவன்!

வேட்பாளனை மேடையில் கட்டிவைத்து
சொற்பொழிவைத் தொடங்குகிறான்
தூக்கம் விழித்த
வாக்காளன்!

கதவற்ற வீட்டின்
ஆளில்லா அறையில்
ஏதுமற்ற கஜானாவை
கொள்ளையிட்ட கள்வன்
தப்பிச்செல்ல முடியாமல் தவிக்கிறான்
பசியிடமிருந்து!

நிலவற்ற இரவில் சோறூட்ட
அம்மாவுக்கு கிடைக்கிறது
பாம்பு கதை.

நிலவைத் துப்பிவிட்டு
குழந்தையை நெருங்குகிறது பாம்பு!

விளைந்த பருத்திக்காட்டில் பெய்யும் மழையைப் போல கணக்கிறது,
நம் முதல் சந்திப்பில்
உன் கணவனை அறிமுகம் செய்துவைப்பது!

**குறிஞ்சிநாடன்**



.

எத்துணைமுறை காண்கினும்
கண்ணுக்கலுக்காத பிரமாண்டம்
எப்போதும் அசைந்தபடியிருக்கும் வரம்;
குழந்தைகளின் நிரந்தர பயங்கலந்த வியப்பு;
பக்தி கொண்டு கும்பிட்டு
பலர் படையிலிடும் கடவுள்;
எப்பயாவது சீறுவதும்
பின்னர் அடங்கிப்போவதும் கண்கூடு;
தன் மேல் விரும்பி பாரஞ்சுமக்கும்;
மெத்த புரிதல்கொண்டவர்களுக்கு
நெகிழ்ந்து கொடுக்கும் குணம்;
சாதி மத வர்ண பேதம் பார்க்காது;
அவைகளின்பால்
பெறப்பட்ட வெண் பொருட்கள்
கரிகாலன் முதல் காந்திவரை பிரசித்தம்;
எப்போது வெறி கொண்டு
எல்லை மீறும்,
பழகியவர்களையே
பலி கொண்டு கொன்றுபோடுமென
உத்திரவாதம் தந்து தொலைக்க இயலாது;
மிச்சபடி
அப்படியொரு ஆழ்ந்த சமுத்தாயிருக்கும்
இந்த யானையும் அந்த கடலும்....

கோ. ஸ்ரீதரன்

# அறம்

பெரிய மரம்
நிறைய கிளைகள்
கொத்து கொத்தாய் இலைகள்
நிறைய பூத்தது..
நிறைவாய் கனிந்தது..
நிழல் கொடுக்கும் மரத்திற்கு கொஞ்சம் கர்வம் உண்டு அதுவே அதன்
மிடுக்குக்கு முதல் காரணம்..
எந்த கோடாரிகளும் மரத்தின் அருகே வரப்பயந்தது ஓர் நாள்
வேர்கள் பழுதுபட கீழ் சாய்ந்த மரத்தை வெட்ட பதுங்கி வந்த
கோடாரிகள் கிளைகளை வெட்டிக்கொண்டிருக்க
திருடுபோனது இலை..
களவு போனது நிழல்..
மரம் வீழ்ந்த இடத்தில் வல்லூருகளின் பறத்தல்..!
மரத்தால் கொழுத்து வளர்ந்து
கடைசியில் மிச்சப்பட்ட இலைக்கு கெஞ்சி கொண்டிருந்த ஆடுகள்
கறிக்கடை வாசலில் தஞ்சமடைந்தது..
ரத்தத்தை பார்த்துக்கொண்டிருக்கும் மாமிசக்கடை கத்திகளிடம் "அறம்"
என்ன விலைக்கு கிடைக்கும்...?!

க.ராஜகுமாரன்

பாட்டி வீட்டிலிருந்து புறப்படும்
போது கொடுத்தனுப்பிய
முத்தத்திலிருந்து இரண்டும்

பக்கத்துவீட்டு அத்தை
கொடுத்த ஒற்றை முத்தமும்

சொந்த பந்தங்கள்
கொட்டிக்கொடுத்த
ஒரு கூடை முத்தங்களும்

பள்ளிக்கு புறப்படுகையில்
அப்பாவும் அம்மாவும்
சேர்ந்து கொடுத்த முத்தமுமாய்

சீருடையணிந்த கால் சட்டைப்பையில்
முத்தங்களை நிறைத்துக்
கொண்டு போகும் குழந்தை

வகுப்பாசிரியை கொடுத்த முத்தத்தையும்
சேர்த்து கொண்டுவந்து பிரித்துக்கொடுக்கிறது

எல்லா பொம்மைகளுக்கும் ....!!!

தனபால் பவானி



.

தோள்மூட்டு
பிசகியபோது
கிணற்றடியில்
வழுக்கிவிழுந்ததாய்
சொன்னாள் தன்-
அப்பாவிடம்.....

பல்லொன்று
உடைந்திருந்தபோது
படித்துறையில்
விழுந்துவிட்டேன்
என்றாள் தன்-
அம்மாவிடம்...

உதடுகிழிந்து
உதிரம் சிந்துகையில்
எரவாணக்கழி கிழித்ததாய்
சொன்னாள் தன்-
அண்ணனிடம்.....

முன்நெற்றியில் இருந்த
தையல் கண்டு கேட்ட
தம்பியிடம்
எருது முட்டியதால்-
என்றாள்.....

கருகலைந்து
உதிரப் பெருக்கின்போது
பால்கறக்கையில்
பசுமாடு உதைத்ததாய்
சொன்னாள்-
பந்தங்களிடம்.......

இப்படியாகவே
எனது
மூர்க்கம் பிரயோகித்த
இரணங்களை எல்லாம்
மூடி மூடி
முந்தானையில்-
மறைப்பாள்-
மனைவி.....

புக்ககம் போயிருந்த
மகளைப் பார்த்துவர
மனைவியோடு
போயிருந்தேன்
புருவமத்தியில் இருந்த
தையலைக் கவனித்து
கேட்கையில்
எரவாணக்கழி கிழித்ததாய்
என்னிடமே-
சொல்கிறாள்

**அழ. இரஜினிகாந்தன்**

.

நான் கோலமிடுகையில்
நீ மையப்புள்ளி
என்னை கொள்ளையிடுகையில்
நீ மாயப்புள்ளி

கரையாக நான்
அலையாக நீ
என்னை அழைக்கிறாயா?
அழிக்கிறாயா?

உன் கைக்குட்டையில்
என்னை மடித்து
அடைத்து வைத்திருப்பது
நான் வெளியேறாமல்
இருக்கவா? இறக்கவா?

கடிகாரமாக நான்
நிமிட முள்ளாக நீ
என் நேரத்தையே
நீதான் நிர்ணயிக்கிறாய்

உன்னைவிட தனிமையே சிறந்தது
ஆராதித்தும் நீ வரவில்லை
அவமதித்தும் அது வந்துவிட்டது

நீ ஒரு மிகச்சிறந்த ஓவியம்
உன்னை ரசிப்பதுதான்
என் கண்களின்
ஆகச்சிறந்த பாக்கியம்

காதல் ஒரு அதியற்புதமான இன்னிசை
அதை நீதான் எனக்கு வாசித்துக்காட்டினாய்

என் கனவுகளை பூட்டி வைத்திருக்கிறேன்
உன் நினைவுகளால்தான் அதை திறக்க முடியும்

**நிவேதா சுப்பிரமணியம்**

நான் பூவிதழின் விளிம்பில்
ஒரு பனி துளி போல்
கால் பெருவிரல் ஊன்றி
கவனமுடன் நடனமிடுகிறேன்
மற்றொரு பனித்துளி
எனக்கு அடுத்ததாக தோன்றுகிறது
மென்மையான காற்று வீசுகிறது
நாங்கள் விளிம்பில் சுழன்று ஆடத்தொடங்க
திறனைத்தும் கொண்டு நிலைப்படுத்திக் கொள்கிறோம்
இறுதியாக, நாங்கள் ஒன்றிணைந்தோம்
ஒளியின் கதிர் நம்மிடையே செல்கிறது
ஒரு அழகான வானவில் உருவாக்க
அது வெறும் பனித்துளி...

**கோ.லீலா**

.

பரீட்சைத்தாள்
ஒரு நதியைப் போல சலசலக்கிறது.
அதன் மையத்தில்
அவள் வரைந்த பரிசல்
முட்டை மதிப்பெண்ணைப் போல்
எனக்குத் தெரிந்தது.
ஒருவர் மட்டுமே அமரக்கூடிய அப்பரிசலில்
யாரை அமர்த்துவதென நான் கேள்வியெழுப்ப
ஒரு கேள்விக்குறியை
பரிசலின் மையத்தில் வரைந்து நங்கூரமிடுகிறாள்.
ஓவியம் கவிழ்த்து வைக்கப்பட்ட
குடையை போன்றிருக்க
வானம் பதிலை
துளித்துளியாய் உதிர்க்கிறது.
குடையைப் பிடித்தபடி
கேள்வியையும், பதிலையும்
மதிப்பெண்ணையும் அவள் சுமந்து செல்ல
நதியும் பறந்தவாறிருந்தது..

**ஷைஷா**

ஆற்றைக்கடக்க முடியவில்லை
இரு கரைகளிலும் ஓடுகின்றன
மணல் லாரிகள்.

**கவிதை ராஜா**



புள்ளிகள் குவிந்த
நுரைகளின் குமிழிகளுக்குள்
செறிந்திருக்கும் வளியொரு
சொல்லளவு படித்திறன்


ஏதிலி மிதவை
கரை நுகர்ந்து கடத்தும்
காற்று மட்டுமே இப்போதைய துடுப்பு..

நெகிழும் இரேகைகள்
அசையும் வளையங்கள் பாதைகள்
வரைந்த திசைகள் தோறும்
கடற்கோள் கணையாழிகள்

பேரிரைச்சலின் பிரவாகம்
மீகாமன் செவிதுளைத்த மீடிறன்
அந்த ஒற்றைக் கடவுச்சொல்லில்
நீங்கிய வேய்ங்குழலின் இசையை
அலைகள் விழுங்கியதும்
ஒரு கடல் மெல்ல நகர்கின்றது

கரைகள் கரைந்து
கடலோடு விண்ணப்பிக்கின்றன
மீட்சிக்கு விடுதலையில்லா
வினாக்கள் மட்டும் விரைந்து
மண்டியிட்டு மாய்கின்றன

**மின்ஹா (மின்மினி)**



ஒப்பனைகள் சூடிக்கொண்டு
அமர்ந்திருக்கும் வெளிச்சங்களின் கீழ்
உண்மையின் நிழல்கள் அடுக்கப்பட்டிருக்கிறது...
கூடுதலாய் உலையில் இடப்பட்டுவிட்ட நீர்
ஓசையின்றி ஏறும் வெப்பத்தில்
மூடிகளை அசைப்பதைப்போல்
மன உலைகளின் வாயிலிருந்து
பொய்களை வெளியேற்ற
நுரைக்கும் நீர்குமிழிகளால்
வாழ்வின் மூடிகளை அசைத்து
வெளித்தள்ளுகிறது காலம்.....
சேற்றில் ஊறி ஊதிக்கிடக்கும்
பெரு மரப்பட்டையின் உட்சுவர்
உறிந்து சிதைந்து
காற்றை சூழும் அழுகிய வாசமாய்
மனித மனதின் வீங்கும் நினைவுகள்...
மண் செறித்த பசுந்தழை குழைத்து
பூமியாய் சுருட்டி கூட்டுக்கு கடத்தும்
சாணவண்டுகளாய்
வாழ்வின் பசியை உருட்டுகிறது
காலத்தின் வண்டுகள்...
சூடிக்கொண்ட கிரீடங்களில்
உருத்தும் முட்களின் முனையில்
மொட்டாகி குவியும் குருதித் துளி...
குவிந்த நொடியில் போதையாகிவிடுகிறது...
சுமைதூக்கி பழகிப்போன
பலங்கொண்ட துதிக்கைகளை
ஏக்கத்துடன் வெறிக்கின்றன
உடல் தாங்கும் எலும்புகள்....

பெரும் நதியின் கரைகளை அரிக்கும்
வெள்ளம் அறியும்
தனது பயணம் துளிகளின் கோர்வையால்
நடந்து வந்ததென்று....
இதையுணரும் பக்குவமின்றி
ஆளுக்கொரு கிளைபிரிகின்றது
மனித வாய்க்கால்கள்...
சுய நலமும்... வாழ்வின் அச்சமும்
சுமந்து திரியும் மனித எண்ணங்களில்
அழுத்தமாய் அறைகிறது
மலைச்சரிவில் சரியும் சரளைகளை
அசட்டை செய்து
குளம்புகளால் மலையின் உச்சிகளை
வசப்படுத்தும் ஒரு வரையாட்டின்
அனுபவத்தை தன்னுள் கொய்து கொண்டு..
அச்சமின்றி.........
புயலில் அலைகழியும் கிளையின்
கூட்டுக்குள் அமர்ந்து
தன் குஞ்சுகளுக்கு இரையுடன் சேர்த்து
வாழ்வின் நம்பிக்கையை ஊட்டுகிறது
சிறகு நனைந்த பறவையொன்று...

**சந்துரு**

.

அத்தனைக்குமான நிறமென்று
ஏதுமில்லை எனினும் ஒவ்வொன்றும்
ஒரு நிறத்தைக் கொண்டிருக்கிறது

அன்பின் நிறம் எதுவாக இருக்க முடியும்???

காதலுற்ற உன் கண்களின் வெளிர் சாம்பல்
நிறத்தை அன்பின் நிறமெனக் கொள்கிறேன்

உடைந்த நிலவொன்றின்
வெளிர்மஞ்சள் துண்டுகளென
நம்மிடையே எரிந்து கொண்டிருக்கிறது காதல்

மூடிய இமைகளுக்குள் சுழலும்
கருமையிலிருந்து அதிர்ந்து மீள்கிறது
நம் இருவரையும் ஒற்றைப் புள்ளியில்
இணைக்கும் ஒரு மாய இசை

பிரித்தெடுக்க இயலாதவாறு
இதயத்தின் மேடு பள்ளங்களில்
நிறைந்து பரவும் மெல்லிய அதிர்வுகளுக்குள்
உன் பெயர் சொல்லி வைக்கிறேன்

உடலின் இடைவெளிகளுக்குள்
வீழ்ந்து கிடக்கும் வெட்கங்களை
மென் முத்தங்களால் பெயர்த்தெடுக்கிறாய்

உனக்கு மட்டுமே புரிந்த
என் தாபத்தின் நீர்க்குமிழிகளை
தடவித் தடவி உடைக்கின்றன
உன் விரல்கள்

வெதும்பிக் கிடக்கும் என் ரகசியங்களின் மூச்சுக்காற்று
உன்னை மேலும் வெப்பமுற்றியிருக்க வேண்டும்

மேகங்களுக்குள் புதையும் நட்சத்திரங்களென
ரகசியமாய் சுழல்கின்றதுன் கண்கள்

எல்லாவற்றின் பொருட்டும்
உன்னைத் தழுவிக்கொண்டிருக்கும்
என் கரங்களுக்குள் தன்னை அர்ப்பணித்துக் கிடக்கிறது உன் உடல்

இப்போது உன் கண்களின் நிறம் இளஞ்சிவப்பு

அதையே காமத்தின் நிறமெனக் கொள்கிறேன்

பிரிதொருநாளில் அது
வேறொரு நிறமாயும் மாறக்கூடும்...

**ஜானு இந்து**

'எல்லாம்' முடிந்து கிளம்பியபோது சுட்டது
விலைமாதுவின் வார்த்தை அவனை.
"அண்ணா உங்கள் ஃபர்ஸ்".

**தியாகராஜன்**

.

யாரேனும் விட்டகன்றுப் போயிருக்கக்கூடும்
இதயத்தின் ஆழத்தில்
வேர்விட்ட நேசத்தைப்
பிடுங்கியெறிந்துவிட்டு....

யாரேனும் சிந்தியிருக்கக்கூடும்
ஓராயிரம் யுகங்களுக்கான
ஒட்டுமொத்தக் கண்ணீர்த் துளிகளை
உவர்க்கும் கடல் நிறைய....

யாரேனும் விம்மிக் கதறியிருக்கக்கூடும்
பிரிவொன்றின் ஆற்றாமைக்கான
வலியின் உச்சத்தில்
நிசப்தப் பெருவெளியின் காதுகளில்
உரக்கக் கேட்க....

யாரேனும் சிந்தும் கண்ணீரைக்
கண்டுகொள்ளாது இருந்துவிடுங்கள்
பரவாயில்லை...
யாரேனும் விம்மிக் கதறுவதைக்
கண்டும் ஆறுதலளிக்காதிருங்கள்
தவறொன்றுமில்லை....

பிரிவாற்றாமையின்
சோக இதயப் பரப்பில்
நேசச் செடிகளின்
ஆணிவேர்களையும் சல்லிவேர்களையும்
ஆழ அகன்று வேர்பரப்பியேனும்
அவர்களின் தீராச் சோகங்களின்
ஆறாக் காயங்களில்
முடியுமெனில் மருந்திடுங்கள்...!
இல்லாவிட்டால்
விட்டகன்றுப் போய்விடுங்கள்.....!

**அன்வர் மில்டன்**



# தேவி

இன்னும் நம்புகிறேன் கைவிடப்பட்ட எனக்கு
கடவுள் காட்சி தருவாரென்று
இறைவனிடம் மரணத்தைத் தவிர
வேறொன்றையும் யாசிப்பதில்லை நான்
நேசித்தவர்கள் மறையும் போது
மரணத்தின் நிழல் என்மீது கவிகிறது
எல்லையற்ற வானத்தின் கீழ்
சிற்றெறும்புகளாக எதைத் தேடியோ
ஓடிக் கொண்டிருக்கிறோம்
உன் மடிமீது என் தலையை வைத்து
கேசத்தைக் கோதிவிடு
கவலையின் அம்புகள் என்னைக் காயப்படுத்திவிட்டன
ஊடுருவிப் பார்க்கும் உன் கண்களை என்னால்
நேருக்குநேர் சந்திக்க முடியவில்லை
மனிதன் பிறந்தது முதற்கொண்டு
ஏதாவதொன்றை இழந்துகொண்டுதான்
இருக்கிறான்
ஆத்மஜோடியை இழப்பதைப் போன்ற
துயரம் வேறு ஏதாவது உண்டா
உச்சி வெயில் கண்கள் மங்குகிறது
அதோ ஒரு நிழலுருவம் என்னை நெருங்குகிறது
பூமியில் நடந்து முடிந்த எந்தவொரு
நிகழ்வும் திரும்பவும் நடக்க
சாத்தியமில்லை
இயற்கையின் பசிக்கு மனித இனம்
கொஞ்சம் கொஞ்சமாக இரையாகி வருகிறது
அவளைப் பிரிந்து வாழும் துயருக்கு
எந்த ஆறுதலும் மருந்தாகாது
வாழ்க்கை மேடையில் எந்த பாத்திரத்தை
ஏற்று நடிப்பது என்று நாம் தீர்மானிக்க
முடியாது இதோ என் கடைசி வரியை
கண்ணீர் நனைக்கிறது.

**ப.மதியழகன்**

சிறு வயதில் தொலைந்து போன
தன் பிள்ளைக்கான புகைப்படத்தை
செய்தித்தாள்களில் வெளியிட்டு
கண்டால் சொல்ல சொல்லி
பதிவிட்டிருக்கிறான் ஏழை தகப்பன்
தன் கைபேசி எண்ணையும்
வேலை முடிந்து
திரும்பும் பொழுதெல்லாம்
எதிர் படும் திருநங்கையை
எங்கோ பார்த்த மாதிரிதான்
தெரிகிறது அவருக்கு
தெரிந்தும்
ஏக்கத்தோடுதான்
பார்த்துச்செல்கிறான்
அவ(ன்)ள்....

**வீ.கதிரவன்**

# காலப் பிம்பம்

சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு
மூஞ்சா கோலம் போடத் தொடங்கிய சிறுவனுக்கு
பல்லைக் காட்டிக் கொண்டிருந்தது
வாக்கு கேட்டு நின்ற
குட்டிச் சுவற்று ஓவியம்

அச்சாணி கழண்டு கவிழ்ந்து கிடந்த மாட்டுவண்டியும்
அசைபோட்டுக்கொண்டிருந்த மாடும்
சொல்லாமல் சொல்லியிருந்தது
பழங்கால நினைவுகளை

இரக்கமின்றி வெட்டியெறிந்த மரமொன்றும்
ஓடாத மிதிவண்டியும்
ஒருசேர கிடந்த கொள்ளையில்
தொட்டிச்செடி ஒன்றை நட்டுவைத்துச்
சிரித்துக்கொண்டிருந்தாள் சிறுமியொருத்தி

சுத்துபட்டை தீட்டிய திண்ணையும்
தேக்குமரத் தூணும்
நாணயம் போலான மாடக்குழியும்
வெறுமை சூழ தனித்திருந்தது
அம்மாச்சியும் தாத்தாவும் இல்லாத முற்றத்து வாசலில்

சக்கரம் பொருந்திய பயணப்பையின் சப்தம்
சிமெண்டு போட்ட தெருவின் நிசப்தங்களை
காலத்தோடு கிழித்துச் செல்கையில்

பூசணிப் பூக்களின் மஞ்சள் நிறம்
உறுத்தாமல் இருந்ததில்லை
கடந்து வந்த பாதையில்.....!

நிவிகா மித்ரை



# மழையும் அவ(மக)ளும்!

உனது குடை விரிப்பில் விழுந்த
மழைத்துளிகளின் மனம்
சிதறலானது!

நீ சுண்டிவிடும்
ஒவ்வொரு
மழைத்துளி(களை)யும்..
மேகம் தேடிச் செல்கிறது!

நீ வெளிவராதவரை
வெறித்தது போலவே நடிக்கிறது
மேகங்கள்!

வடியும் மழைத்துளியை
உன் கைகளில் ஏந்துகிறாய்
அது வானத்தை நிறப்புகிறது!

மழை வெள்ளம்
வீடு வருவதற்குள்;
நீயே சென்று
கொஞ்சம்
நனைந்து வாயேன்!

உன்னைத் தொடவே
பின் தொடர்கிறதா
இந்தக் கனமழை!

அந்த மழை
பிடித்துக்கொண்ட
குடை நீ!

கமல் காளிதாஸ்

# காற்று நிரப்பிய கனவுகள்

தன் ஆயுளுக்கான
மூச்சுக்காற்றில்
மூன்றில் ஒரு பங்கை
பலூன்களின் வயிற்றில்
நிரப்பி நிரப்பி -தன்
பிள்ளைகளின் வயிறு
நிறைத்து
ஒட்டிய கன்னங்களும்
சுருங்கிய நுரையீரலுடனும்
வீதியுலா நிதம் வரும்
அந்த பலூன் வியாபாரி
அசந்துறங்கும் ஓரிரு இரவுகளில் காண்பதெல்லாம்- வெறும்
காற்று நிரப்பிய கனவுகள்..!

தப்திவிக்கி செல்வராஜ்

நதியை கைகளால் அசைத்து
நிலவையும் அசைக்கிறேன்...

நீர்க்குமிழ்கள் கொப்பளிக்கின்றன
மௌனத்தை கலைத்துவிட்டதாக...

மெல்ல இருட்டின்
போர்வையை விலக்கி
துயிலிருக்கும் நதிப்பேராண்மையை
காண்கிறேன்...

செடி பூவில் உறங்கும் ரகசியத்தை அறியநேர்கையில்
சிலாகித்துதான் போகிறேன்...

அவிழும் மின்மினி பூச்சிகளின்
வெளிச்சங்களை
நீருண்ணிகள் உண்கின்றன...

தனியாய் காற்றின்
திசையில் மிதந்து வரும் சருகை
நான் இலையென்றுதான்
இப்போதும் சொல்வேன்...

நடுநிசி குளுமையோடு சிலதுளிகள்
விழ நதி வெட்கங்கொள்கிறது...

நான் கைகளால் கண்களை மறைத்தபடி
ஓடுகின்றேன்...

நதியும் மழையும்
நெடுநேரமாக
பேசிக்கொண்டிருந்தது விடியும்வரை

ராம் பெரியசாமி



# மௌனம்

மௌனமென்பது சம்மதங்கள் மட்டுமல்ல;
அது மறுப்பின் அடையாளமும் கூட..!!

எங்கோ நம் சகோதரன் அழிக்கப்படுகையில்
மௌனமாய் இருந்தே வேடிக்கை பார்க்கிறோம்..

அழித்துக் கொண்டிருந்தவன் அழிந்து போகையிலும்
மௌனமாய் இருந்தே பழிதீர்த்துக் கொள்கிறோம்..

மௌனமென்பது சிந்தனைகள் மட்டுமல்ல;
அது பலவீனத்தின் அடையாளமும் கூட..!!

நேசத்தின் அதியுட்ச நிலையிலும்
வெறுப்பின் இறுதி படிநிலையிலும்
மௌனமே நம் மிகச்சிறந்த சைகைமொழி..

இயலாமையில் உடைந்திடும் போதிலும்
துரோகத்தால் நொறுங்கிடும் போதிலும்
மௌனமே நாம் பற்றிக்கொள்ளும் ஊக்கமருந்து..

மௌனமென்பது வலிகள் மட்டுமல்ல;
அது வலிமையின் அடையாளமும் கூட..!!

அதோ..
மௌனத்தின் மேகங்களுக்கிடையில்..
மௌனப்பறவைகள் சிறகு விரிக்கின்றன..

மௌனத்தின் சூரியனோ
எப்போது வேண்டுமானாலும் சுடர் விடலாம்..

ஆதலால்..
என் தோழர்களே..!!

உங்கள் உதடுகளை இறுக பூட்டிக் கொள்ளுங்கள்..

மௌனத்தின் சிறகுகளுக்குள்
நம் உலகம் மிக பத்திரமாய் உறங்கிப் போகட்டும்..!!!

ரிஸ்கா முக்தார்

வேலை செய்த வீட்டின்
மிச்ச உணவுகளை
சுருங்கிய வயிற்றோடு
தன் பிள்ளைகளுக்கு சுமந்து வரும்
பெண்ணவளுக்கு
சிறகின் கீழ்
தாய்மையின் நிழல் விரித்து பறக்கிறது
வயிற்றில் பசியோடும்
அலகில் இரையோடும்
கூடையடையும் ஒரு தாய் பறவை...

அ.க.இராஜாராமன்

.

"மனங்கவரும் அழகு
நீளமான கூந்தல்
இனிக்கும் குரல்
சமமானக் கல்வி
அடக்கமான வாய்
அன்பான குணம்
கவிதை மீது ரசனை
பாடல்கள் மீது ஆர்வம்
அருமையான கைபக்குவம்"

என்
ஆகாசகனவுகளுக்கு
பொருந்தாத அவளும்.....

"ஆசிரியப் பணி
கடவுள் பக்தி
போதையை தொடாத விரல்கள்
சுருள்சுருளாய் முடி
அழகான சிரிப்பு
சிவந்த நிறம்
கம்பீரமானத் தோற்றம்
கட்டுப்படுத்தாத பண்பு
விரலசைவிற்கு தலையாட்டும் குணம்"

அவளின்
நீண்டகால கனவுகளுக்கு
பொருந்தாத நானும்.....

மாலை மாற்றிக் கொண்டோம்

பத்துப்பொருத்தங்களும்
அற்புதமாகப் பொருந்தியிருப்பதாக
சோதிடர் குறித்த
முகூர்த்த நேரத்தில்..

**ஐ.தர்மசிங்**



.

உடை மாற்ற நேரமின்றி
நீராடவும் நினைப்பின்றி
ஊதியம் இன்றி
உழைத்துகொண்டிருக்கிறான் அவன்

ரைட் ரைட் சீச்சி அடித்து
பேருந்தை வழியனுப்புகிறான்
யாரும் கண்டுக்கொண்டதாய் தெரியவில்லை

நீ இப்படி போ
நீ வரலாம்
வளைஞ்சி திரும்பு என்று
எல்லோருக்கும் கை அசைப்பான்

பணம் கொடுத்து ஏமாறாதே
பணம் வாங்கி ஏமாற்றாதே
என ஆக்ரோசமாய் இடையிடையே
ஊழையிடுவான்

வெள்ளை சட்டைகளே
தீராத வெண்குஷ்டம் என்பான்
அவரின் அங்க அசைவும்
வாய்மொழியும் கல்லூரி  காலங்களில் எனக்கு அத்துப்படி

ஆண்டுகள் கடந்து
சொந்த ஊரு திரும்புகையில்
என் செவி துளைத்த
அந்த பரிச்சையமான குரல் ஈக்களின் ஊர்வலத்தில்
சிக்கி தவிப்பதை
கண்டேன்
விழி நீர் ததும்ப என்னையே
மறந்து இதயம் கனத்து
நின்ற என்னை மேலும்
சில்லு சில்லாய் கிழித்து
உப்பில் தோய்தது அவரின்
இடைஞாண் கயிற்றில் தொங்கிய
அந்த கோல்டுமெடல் ......

**மலர்**

அந்தக் கட்டம்போட்ட சட்டை
உன்னுடையதாகவே தெரிகிறது.

நீள முடிக்காரனின் சிரிப்பும்
உன்னையே ஞாபகப்படுத்துகிறது.

தூரத்தில் கடப்பவனின் உயரம்
உன் அளவேதான் இருக்கும்.

மிதிவண்டியை லாவகமாகத் திருப்புபவனும் நீயே ஆகிறாய்.

விடுமுறை முடிந்து
விடுதி சென்ற மகனே
எப்போது வீடுதிரும்புவாய்??

**மஞ்சு விஸ்வநாதன்**

.

முன்வரிசை பற்கள்
துருத்திக் கொண்டிருக்கும்
காயத்திரி அத்தையின்
சவ ஊர்வலத்திற்கு
முதல் ஆளாய் மழைதான் வந்தது.
கணவனை இழந்த அவளுக்கு
பல இரவுகளில்  மழைதான்
துணைக்கு இருந்திருக்கிறது.
மழை ஏன் எப்போதும் இந்த மனித துயரை
இரட்டிப்பாக்கி காட்டுகிறது?
நான் சிறுவனாக இருந்த போது
ஒருமுறை
மழையில் நனைந்து கொண்டு
அவள் வீட்டுக்குள் ஓடிய என்னைப் பிடித்து
முந்தானையால் தலைதுவட்டிவிட்டு
சூடான காபியும் பட்சனங்களும் கொடுத்தாள்.
நான் காபியை உறுஞ்சுகையில்
என்னை அதிசயமாக தொட்டுப்பார்த்த
மூளை வளம் குன்றிய சிறுவன்தான்
இப்போது சவ ஊர்வலத்துக்கு
முன்னால் நடந்து கொண்டிருக்கிறான்.
பாடையில் குலுங்கும் அவள் உடல்மீது
அத்தனை ஆக்ரோஷமாக மழை பெய்து கொண்டிருக்கிறது.
சவத்தை குழிக்குள் இறக்கும்போது
ஆசையாக ஒருமுறை அவள் கன்னத்தை கிள்ளி
முத்தமிட்டுக் கொண்டது மழை.
நாங்கள் சவ அடக்கம் முடிந்து
முன்னிரவில் வீடுதிரும்பி கதவடைத்துக் கொண்டோம்.
போதை முற்றிய குடிகாரனைப் போல
மழை மட்டும் தெருவில் தள்ளாடிக் கொண்டிருந்தது.
கொத்துக் கொத்தாய் வந்து அதனிடம்
துக்கம் விசாரித்துக் கொண்டிருந்தன மின்னல்கள்.

**கார்த்திக் திலகன்**



# நான்கு தேவதைப்பயல்களின் வன்புணற்கொள்கைகள்

**தேவதைப்பையன்** *1*
*ஒவ்வொருமுறையும்*
*மென்புணர்வுக்குத்தான்*
*ஆசைபடுகின்றானாம்..!!!*
*பெண்கள் இசையாததால்*
*வன்புணர்வாகி*
*விடுகின்றதாம்..!!!*

**தேவதைப்பையன்** *2*
*மீசைக்கு தடவும் அதே*
*எண்ணெயைத்தான்*
*அதற்கும் தடவுகின்றானாம்..*
*இரண்டையும் முறுக்கேற்றிக்கொள்கிறான்..!!!*
*ஒன்று சாதிப்பெருமைக்காம்...!!!*
*மற்றொன்று சாதிகாணா*
*சமத்துவப்பெருமைக்காம்...!!!*

**தேவதைப்பையன்** *3*
*சாதித்திரையை கிழிப்பதற்குத்தான்*
*அவனும் போராடுகின்றானாம்..*
*அதற்கான ஒத்திகைகளைத்தான்*
*கன்னித்திரையில் காட்டுகின்றானாம்...!!!*

**தேவதைப்பையன்** *4*
*கல்லெறிக்கனிகளுக்கே*
*ருசி அதிகமாம்..!!!*
*இதில் கனி, காய், வடு என எவ்வித*
*பாகுபாடுமில்லையாம்...!!!*
*எறியும் கல்லில் படும் கனியே*
*அன்றைய புசித்தலாம்...!!!*

**நடந்தது என்ன..** *?*
*சுள்ளி பொறுக்கிவந்த*
*எட்டு வயது சிறுமிக்கு*
*அதே சுள்ளிகளால் மெத்தை*
*தைத்தன நான்கு ஏழரைகள்...*

**நடப்பது என்ன..** *?*
*மடிந்து மண்ணாகிப்போனாள் சிறுமி..*
*அவளின் யோனிப்பகுதி எலும்புகளை*
*மூடியபடி காவல் காக்கின்றன*
*சில முட்புதர்கள்..*

*முன்பொருநாள் அப்புதரின்*
*கோபத்திற்கு ஆளாகி ஒருசில*
*உடற்கீறல்களுடன் ஓடிவிட்ட*
*நான்கு மிருகங்கள் மீண்டும்*
*ஒரு பிணப்புணர்வுக்கு*
*வரக்கூடுமென்ற பயத்தில்..!!!*

**ஆனந்த்**

# ஏந்தும் கரங்களில் அடர் அழுக்கு

நின்றிருத்தலைவிட
அன்றன்று இருத்தல்
வாய்த்த அற்பத்திற்கு
அனைத்தும் அழககழகே...,

கொடும் ஒரு கோடையின்
வெப்பம் உதிர்தலைப்போலவே
பழுத்த இலையொன்று
மண்ணிற்கு இங்குமங்குங்கும்
ஆடியபடி கீழ் வருகிறது.,
மடி ஏந்து,
மனம் முந்து.


நகர்தலைப்போல் மனம் தலைப்படுவது
முடவனுக்கு எவ்வளவு சுதந்திரம்?
விரல் பற்றி இழுத்தாவது
நகர்த்துங்கள் இவனை.

பசியேறிய பழுப்பு விழிகளை நிரப்புவது
இலைகளில் காய்ந்த சோற்றுப்பருக்கைகளின்
உலர் பதன அழுத்தம் மட்டுமே.

காத்திருப்பது ஒரு சொட்டு
காருண்யத்திற்கு,
அடை தேனீக்களாய் வந்தடைந்ததோ
வேம்பின் கசப்புப் பொதி.

உள்ளங்காலின் நரகல்
மிதிப்புக்கு பழகிப்பழகி
ஒருமலரின் மென்மையை வகைப்படுத்த இயலாமல்
மேலும் அழுத்தியல்லவா கால்கள் அழுந்தத் தேய்கின்றன?

**வேதநாயக்**



# தாகத்தின் பயணம்

சிதறிக்கிடக்கும்
வானவில்லின் சில்லுகளைச் சேகரித்தபடி சிறுவன்
முன்னே செல்ல
பின்னே
வாலாட்டியபடி
காலப்பேழை

பனியின் குளிரைமட்டும்
தன் சிறகுகளால்
நனைத்துக்கொள்கிறான் அவன்

பயணத்தின் தாகத்திற்கு அது போதுமானதென்றே பிறவி கூற
மறுப்பதற்கில்லை

கடை நிமிடத் துளியொளியுடன் மெழுகுவர்த்திகள்...
வழி முழுதும்

சிறு நம்பிக்கை
மழலையின் புன்னகையாய்
மீந்திருக்க...
தூரத்தில்
திசைகளைக் கலைத்து மகிழும்
விதியின் குரல்
அடுத்த ஓர் ஆரம்பத்தின்
நுழைவுச் சீட்டாகவும் இருக்கலாம்...

**ம.கனகராஜன்**



# தல விருட்சம்

அற்றைநாள் உலகம் தோன்றி
-----அமைந்தது முதலாய் எந்தக்
கொற்றவர் ஆளும் தேசம்
-----கொடிபடை கொண்டிருந் தாலும்
மற்றதன் மண்ணுக் கென்று
-----மகத்துவம் பற்பல உண்டு
உற்றதாம் அதிலொன் றாங்கே
-----உயர்தனித் 'தலமர' மாகும்

ஒவ்வொரு இடத்திற் கென்று
-----ஒருசில சிறப்பு உண்டு
எவ்வகைச் சிறப்பு என்றும்
-----எடுத்துநம் முன்னோர் சொன்னார்
அவ்வகைச் சிறப்பில் நான்கே
-----அங்குள்ள கல்லும் மண்ணும்
எவ்வுயிர் வாழு தற்கும்
-----ஏற்றதோர் மரமும் நீரும்!

ஊழியில் வந்த கல்லே
-----உருவத்தில் 'மூர்த்தி' ஆகும்;
ஆழமாய்த் தோண்ட ஊறும்
-----அந்தநீர் 'தீர்த்த' மாகும்;
வாழவே விளைச்சல் நல்கும்
-----வளநிலம் 'தல'மென் றார்கள்;
வாழ்வாங்கு அங்கே வாழும்
-----வளர்தரு 'விருட்சம்' ஆகும்.

இயற்கையை இறையாய் எண்ணி
-----இருந்தநம் மக்கள் அன்று
செயற்கையாய் உருவம் நூறு
-----செய்தனர்; வணங்க; வாழ!
இயல்பினில் திரிந்த காற்றை
-----இன்னுயிர் மூச்சுக் காற்றாய்
செயலதால் மாற்றும் அந்தச்
-----செழுமரம் கடவுள் என்றார்

உண்ணநற் கனிகள் காய்கள்;
-----உறங்கநன் நிழல்தான்; வந்து
எண்ணரும் பறவை வாழ
-----ஏற்றதோர் கூடு; பூக்கும்
வண்ணமார் மலர்கள்; வாய்க்கும்
-----வகைவகை மருத்து வங்கள்;
எண்ணதான் மரத்தில் இல்லை?
-----ஏற்றதோர் கடவுள் அஃதே!

அரசொடு ஆலம் வில்வம்
-----அத்தியொடு கொன்றை வன்னி
உரசுசந் தனமும் நெல்லி
-----உதிர்மலர் மகிழம் புன்னை
வரந்தரு கடம்பை வேம்பு
-----வளமிகு மருதம் போன்று
மரங்களில் மண்ணுக் கொன்று
-----மாண்புடைத் 'தலவி ருட்சம்'!

**வையவன்**

# பாட்டி

பிரசவம் பார்ப்பது
தேளுகடிக்கு வைத்தியம் பார்ப்பது
சுளுக்கெடுப்பதென ஒரு பொது
மருத்துவச்சி மோட்டுவீட்டுபாட்டி
ராத்திரியில் கொஞ்சம்சோறு
வைத்தியம்பார்த்தா வெத்தல பாக்கு
கூலிவாங்கமாட்டா
மோட்டுவீட்டுபாட்டி

ஆ..ஊ..னா கத்திவச்சிடுறானுவோ
பாட்டிகைவச்சா அது
சுகபிரசவம்தான் கைராசிக்காரி
மோட்டுவீட்டுபாட்டி
பனிக்கொடம்ஒடையில
வலியும்நிக்கல ரெண்டுநாளு
கூடயிருந்து பிரசவம்பார்த்தா
மோட்டுவீட்டுபாட்டி

ராத்திரிக்கி கொஞ்சம்
சோத்தவாங்கிக்கிட்டு
ம்........என்ன நெனச்சிபேருவச்சானோ என்
அப்பன் ராசாத்தினு
பொலம்புன்டிபாட்டினு
ஊரே பேசுது

தனக்கொரு வாழ்க்கையும்
அமையல கொள்ளிபோட ஒரு
பிள்ளையும்இல்லயென்ற
ஏக்கத்தோடவே
செத்துக்கிடக்கும் பாட்டிக்கி
யார்தான் சொல்லிடமுடியும்
நீ பிரசவம்பார்த்த அத்தனை
பிள்ளையும் உன்னசுத்திதான்
நிக்கிறோமென்று.

**வ.முகிலழகி**

# கேள்வி

பாச வியூகத்துள் சிக்கி
உள்நுழைந்து வெளியேறும்
உத்தியறியாமல் உயிர் விட்டவன் நீ

உன்னைத் துளைத்து
உருக்குலைந்த அம்புகளில்
உயிர்க் குடித்த அம்பு எதுவென்று அறியாமல்
பழியேற்கும் அன்பும்

கடைசியாய் கண்கள் பஞ்சடைந்து
பார்வை மங்குமுன்
அதில் நெளிந்த
'நீயுமா' என்கிற கேள்வி
நிரந்தரமாய் என்னை...

**சக்திஅருளானந்தம்**

என்னைக் கொலை செய்ய
அவள் கடவுள் உத்திரவிடுகிறார்.
அதற்கு என்னென்ன திட்டங்கள் தீர்மானிக்கப்பட்டதோ
நிச்சயம் எனக்கு தெரியாது.
திகைத்து நிற்கும்படியான
திகிலூட்டும் வரிகளை எழுதச் செய்ய விடுகிறார்.
கைநரம்பை அறுத்துக்கொண்டு
நள்ளிரவில் காதல் கவிதைகள் படிக்க சபிக்கிறார்.
நூற்றுக்கணக்கில் பறவைகளை
மண்டைக்குள் அடைத்து
கூச்சலிடவும் எச்சமிடவும் கட்டளையிடுகிறார்.
கண்ணீர் பெருக்கியபடி
பிடித்த பாடல்கள் என்னிடம் சூழ ஏவுகிறார்.
பாவம் அவள் கடவுளுக்கு
கொலை செய்யவும் தெரியாது போல.

**கோபி சேகுவேரா**



'அ' கற்கும் முன்பே
'ஆ' சொல்ல பழகிக் கொள்கிறது
சோறூட்டும் தாயிடம் மழலை

**சாண்டில்யன் விவேகானந்தன்**

# இதற்குள் தான் நிகழும் அரோசிகம்

நாம்
புரிந்தாலும் புரியாவிட்டாலும்
இப் பிரபஞ்சம்
சுழன்றுகொண்டுதான் இருக்கும்.
சுழலுகையின் இரைச்சலுக்கிடையே
ஒரு பிறப்பின் அழுகுரல்
ஒரு இறப்பின் அழுகுரல்
ஒலித்த வண்ணமே இருக்கும்.

சமகால ஒரு பிறப்பை ஒப்பிடுகையில்
மாதம்
திகதி
நன்நேரம்
தீர்மானித்தலின் ஊடே
நிகழ்த்தப்படுகிறது.

ஆனாலும்...

ஒரு இறப்பை யாராலும்
தீர்மானிக்க முடியாததாகின்றது
ஒரு வீதியில்..
ஒரு ஆழ்ந்த உறக்கத்தில்..
ஒரு விரோத அரசியலில்..
ஒரு தோல்வியில்..
ஒரு இயற்கையின் சீற்றத்தில்..
ஒரு மருத்துவரின் அசமந்த போக்கில்..

இன்று
நாளை
நாளை மறுநாள்
பெருவிரலும் ஆள்காட்டி விரலும்
உரசிக்கொள்ளும் கணத்தில் கூட
தீர்மானிக்கப்படலாம்.

இதற்குள் தான்
பேராசை
மூடநம்பிக்கை
அந்தரங்க விபரீதம்
கற்பழிப்பு
இறுமாப்பு
சாதிப் பெருமை
வஞ்சப் புகழ்ச்சி
என்னும்
பிறப்பின் அருவருப்புக்கள்
நிகழ்த்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது

**சத்தியபிரியா**

மீன் அழுதால்
தெரிவதில்லை. . .
சரி...,
மீனவர் அழுதாலுமா?!

**அ. பெர்னாட்ஷா**

கழனி
உன்னைப்போல்தான்
வேம்பரசி....
அடுக்கடுக்காய் ரகசியங்களை
மறைத்து வைத்து ஆச்சர்யப்படுத்துவதில்
நீ மூத்தவளாகி விடுகிறாய்...
உன்னை சமாதானப்படுத்த
என்னிடம் திகட்ட திகட்ட
அழகழகான வார்த்தைகளை
திணித்து விடுகிறார்ஆதிக்கடவுள்...
அவைகளின் ருசி தாங்காமல்
ஒழுகும் எச்சிலை இப்பொழுதெல்லாம்
மறைக்க விரும்புவதில்லை...
ஆதிக்கடவுளின் மொழி மௌனமில்லையா... ?
மௌனங்களையும் வார்த்தைகளையும்
விதையாக விசிறிக்கொண்டே
இருக்கிறேன்....
நீ
உன் கோபத்திற்கு
அலங்காரம் செய்து அழைத்து வருகிறாய்..
அதைத்தூக்கி கொஞ்சுவதற்குள்
நெடு நெடுவென வளர்ந்து
என்னை குனிந்து பார்க்கிறது....
அதை இன்று மட்டும்
கருணைக்கொலை செய்துவிடுகிறாயா.?

**தோழன் பிரபா**



# திரு முழுக்கு

முனுசாமிக்குத் திருமுழுக்குச்
சடங்கு அன்றுதான்
முழு வீச்சில் நடந்தேறியது.

அன்று யாக்கோபு இஸ்ரயேல்
என ஆனது போல் இன்று முதல்
நீயும் யாக்கோபு எனப்படுவாய்
புதுமனிதனாய் உனது
குடிப்பழக்கத்தை கைவிட்டு
திருந்திய வாழ்க்கை
வாழ்ந்திடு எனச் சொல்லி
மூன்றுமுறை அவர் தலையை
தண்ணீரில் மூழ்க வைத்தனர்.

புதுத் தெம்புடன் வந்த
புதிய யாக்கோபு வீட்டின்
ஃப்ரிட்ஜில் இருந்த
மூன்று மது போத்தலையும்
திறக்காமல் தண்ணீரில்
மூழ்கச் செய்து விட்டு
இன்று முதல் இவை
பழரசம் எனப் பெயர்
மாற்றப் பட்டது என்று
சொல்லி ஆசீரவதித்தார்.

**தா. ஜோ. ஜூலியஸ்**

நம் முகமூடிகளை
கழற்றி வைத்தாகிவிட்டது
என் பலவீனங்களோடு நீயும்
உன் பலவீனங்களோடு நானும்
மோதப்போவதில்லையென
ஒப்பந்தம் செய்தாகிவிட்டது
உன் கண்ணை உறுத்தும்
என் பலங்களை வீழ்த்துவதிலேயே
குறியாய் இருக்கிறாய்
நானோ உன் பலங்களோடு
சமாதான உடன்படிக்கை
போட்டுவிட்டேன்
இருமடங்கு பலம் பெற்றுவிட்ட
என்னைவீழ்த்த வீண்முயற்சி செய்யாதே
வாளை கீழே வீசிவிட்டு வா
என் வெற்றியை
கொண்டாடலாம்.

**காயத்ரி**


கிழிக்கமுடியாத
முகமூடிகளுக்குள்
மூச்சு திணறிக்கொண்டிருக்கிறது
பல நியாயங்கள்...

**சத்யா**

நான் கரைந்துகொண்டிருக்கிறேன்
மிக நுட்பமாக....
நான் கரைக்கப்பட்டுக்கொண்டிருக்கிறேன்
மிகச் சாதுர்யமாக....
எனக்கும் ஒரு வசந்தம் இருந்தது,
எனக்கும் ஒரு வாழ்வு இருந்தது,
ஒரு வண்ணத்துப்பூச்சியை
பிய்த்து விளையாடுபவர்களுக்கு
மத்தியில் புனிதமான நேசத்தை
தேடிய புண்ணியவான் நான்
என் கால்கள் தளர்கிறது
ஆனாலும் நான் நடப்பேன்...
என் கைகள் நடுங்குகிறது
ஆனாலும் நான் வாளேந்துவேன்....
என் குரல்கள் அடைக்கிறது
ஆனாலும் நான் கோஷமிடுவேன்....
சாக்கடைகளையும்
முட்களையும், துரோகங்களையும்
கடந்துவந்ததன் மயக்கம்
என்னை இப்படி செய்கிறது
அவர்கள் எண்ணுவதைப்போல
ஒரு தூக்குக் கயிற்றை
நான் என்றும் முத்தமிடப்போவதில்லை
என் நேசத்தை அழுக்கற்று
அருந்தியவர் எவரேனும்
என்னை தட்டி நிமிர்த்துங்கள்
நான் தைரியம் கொள்வேன்
இல்லாவிடினும் நடப்பேன்
என் தளர்ந்தகால்களால்.....

இத்தனை இன்னல்களையும்
நான் கடக்கிறேன்
துரோகம் என் முன்னே
தலை குனியும் நாளிற்காக....

**அனாதியன்**



வனாந்தரத்தின்
புதரிடுக்கில் தப்பிப்
பிழைத்த தப்புவிதையின்
துளிர்த்த முனையொன்று
முள்மரத்திடம் படர்ந்து
கிடக்கிறது...
அகக்காடுகளை அலசிப்
பார்த்தாலும்
அன்பின் துளி
அகப்படுவதில்லை.
விஷச்செடிகளின்
வீர்யத்திற்கு முன்
வலுவிழந்து கிடக்கிறது
வாய்மையின் வாசம்..
நேசத்தின் சுவடுகள்
நிறமிழந்து நிற்கின்றன..
நியாயமற்ற நெஞ்சத்தின்
வாயிலில்...
காலப் பரிணாமத்தின்
கசங்கிய வார்ப்புகளில்
கொஞ்சம் கொஞ்சமாக
சிதிலமடைந்து கொண்டிருக்கிறது
பாசக் கட்டுமானங்கள் ..
துரோகமும் குரோதமும்
நீதியின் முதுகில்
சவாரி செய்து கொண்டிருக்க
தலை நசுங்கி
மூலையில்
முனகிக் கொண்டிருக்கிறது
தர்மம்...

**மதுரா**



.

நகரும் இரயில்
சன்னலோரம் அமர்கிறது
பட்டாம்பூச்சி.

இரயில் பயணம்
அழகாயிருக்கிறது
மலை உச்சிக் கோயில்.

இரவு மழை
தூக்கத்தில் கேட்கிறது
தவளைச் சப்தம்.

மழைச்சாரல்
வாவென அழைக்கிறது
பறவையின் குரல்.

விரலாடும் நதி
கலைகிறது
பிம்பம்.

**குமரேசன் கிருஷ்ணன்**

மகளை சிரிக்கவைத்து
மத்தாப்புக்கள் கொண்டாடுகின்றன
தீபாவளி.

**க. மகுடபதி**

எவ்வளவுதான் சரியாகக் கணக்குப் போட்டாலும்
எட்டாம் வகுப்பு கணக்கு வாத்தியார் மகள்
கயல்விழியைவிட எனக்கு ஒரு மதிப்பெண்ணாவது
குறைவாகவே போடப்பட்டது

சரியான உச்சரிப்பில் நான் திருக்குறளை ஒப்பித்தாலும்
தமிழ் வாத்தியார் மகன் குறளரசனுக்கே எப்போதும் முதல் பரிசு

கடைசியாக நான் பாடியது சுதந்திரதின விழா மேடையில்தான்
சுருதி தாளம் சரியில்லையென பாட்டு டீச்சர் திருகிய காது
இன்னும் வலிக்கிறது
அன்று நடந்த பாட்டுப் போட்டியில்
டீச்சர் மகள் மல்லிகாவுக்கே பரிசு

இத்தனை வருடங்கள் கழித்து என் மகனின் முதல் பரிசுகள் நிரம்பிய
அலமாரியைக் கடக்கும்போதெல்லாம் விவரிக்க இயலா பெருமிதம் வந்து
என்னைக் கவ்விக்கொள்கிறது

மூன்று முயல்களை வென்றுவிட்ட சந்தோஷம்
இந்த ஆமைக்கு இப்போதுதான் வருகிறது

**அகதா**

நான் விழுந்த பள்ளத்தில்
ஏற்கனவே விழுந்திருக்கிறது
பலரின் எதிர்பார்ப்பு

**கி. கவியரசன்**

ஆட்டுக் குட்டிகளுடன் அலைந்து கொண்டிருப்பவனை
மேய்ச்சலின் நிலம் விழுங்கிக் கொண்டிருக்கிறது
ஓநாய்களின் பற்வரிசைகளை முத்துக்களாய் கோர்த்தவன்
இரத்தப் பசியுடன் அலைந்து கொண்டிருக்கிறான்
தந்திர வார்த்தைகளை ஜபமாலையாக உருட்டியவர்கள்
சாத்தானின் முத்திரைகளை விதைத்துவிட்டுப் போகிறார்கள்,
வருடித்த மழை மேகங்கள் உக்கிரத்தின் விகாரம்
அகலிடம் அகலியம் விழுங்கிச் சீரணிக்கும் பொழுதில்
சிறு புல்லும் ஏனென்றக் கேள்விகளில் தலை குனிந்து நிற்கும்
எரிக் கற்களின் எந்திரமழையில் உய்த்தல் உலர்ந்து போக
எள்ளுதலின் துய்த்தல் உறைந்து போகும்
மௌனம் எழுந்து நிற்கும் விகார ரூபத்தின் கீழ்
ஆசைகளை இறக்கி வைத்து விடியல் கேட்பர் வரிசையில்
ஆட்டுக் குட்டிகளும் அவனும் தகித்துத் தண்ணீர் கேட்கிறார்கள்
சிறு கனவென விரியும் புல்லில் நீரருந்த அனுமதி
கள்ளியின் பாலருந்திய அவர்களின்
காபால மூளையில் வழியும் தந்திரம் சீழெனப் பெருக...
ஆதாமை அச்சுறுத்திய அக் கனிமரம் காய்க்கத் தொடங்குகிறது
ஏவாள் நிர்வாணம் போதுமென ஆடைகளை விலக்கி நடக்கிறாள்
பூமி மெல்ல பொசுங்கிக் கொண்டிருக்கிறது.

முகமது பாட்சா



# கடவுளின் தராசு

கடவுள்
யாரென்ற
வார்த்தையில் தொடங்கி
கருணை என்ற வார்த்தைக்குள் முடிந்து விடுகின்றார்

வேறு விளக்கம் தருகிறேன் என்பவர்கள்
சற்று விலகி இருங்கள்
இது கடவுள் ஓய்வெடுக்கும் நேரம்

கடவுள்
மனிதர்களை படைத்த கையோடு
அவர்களின் பாவ புண்ணியங்களை கணக்கிட
ஒரு தராசை வடிவமைக்க

படைக்கப்பட்ட மனிதர்கள்
காலச்சுழற்சியால் மூன்று குழுக்களாக பிரிந்து
கடவுள் ஓரம்கட்டப்பட்டார்
தராசில் மதங்கள் நிரப்பப்பட்டது

இப்போது கடவுளின் தராசை
காணவில்லை

முதலாவது கூட்டம்
அது கடவுளின் விளையாட்டென்கின்றது

இரண்டாம் கூட்டம்
அது கடவுளின் கவனக்குறைவென்கின்ற நேரத்தில்

மூன்றாம் கூட்டம்
புதிதாய் ஒரு கடவுளை உருவாக்கிகொண்டிருக்கின்றது

தராசு தப்பித்தவரை
போதுமென்று
தனக்குள்ளே சிரிக்க


கடவுள்
தான் ஏன் கடவுளானேன்
கடவுளானபின்னும்
ஏன் மனிதனை படைத்தேனென தனக்குத்தானே
புலம்பிக்கொண்டிருக்கிறார்

*சிபி பாரதி*



ஒளியின் உமிழ்நீர் துப்பி
புறவூதா வழியே
வாசல் தெளித்து உதிர்த்து
பூமி பந்திலோர்
வெயில் வாசத்தின்
அங்காடிகளை அமர்த்துகிறது
நீ நான் அந்த சாலையில்
தினம் வாங்கி குடித்து
உறங்கி கிடக்கிறோம்...
முரட்டு இயக்கத்தை
ஒற்றுமை எனும் பெயரில்
பச்சயங்களை பாடை ஏற்றி
சிரித்தபோது..
ஊர்ந்து சென்ற
எறும்பு கூட்டம் தன் ஒற்றுமையின்
திடம் பற்றி பேசியவனின்
கன்னத்தில் ஓங்கி அறைந்து செல்கிறது
ஒவ்வொன்றின் வாயிலும்
ஒரே ஒரு மண் துகள்
சவங்களின்
அருகே வீடமர்திக்கொண்டிருந்தன அவை.

**இரா.புருஷோத்தமன்**



# துருவேறிய நினைவுகளை

*விரல் பருமன் தூசி படிந்து கிடந்த*
*பழைய டிரங்குப்பெட்டிக்குள்*
*மூச்சு வாசனை ஏறிய*
*பழைய காகிதங்களை*
*கண்டன சில*
*சுண்டெலிகள் ஒரு நாள் இரவு*

*அவற்றில் உடல்சூட்டின் ருசியறிந்து*
*கடித்து தின்றன முழு இரவும்*
*செரிக்கவும் இயலாமல்*
*துப்பவும் இயலாமல்*
*துருவேறிய நினைவுகளை*

*மதிமயங்கி கிடங்கின்றன*
*யுகம் யுகம் கடந்த பின்பும்*

**தங்கேஸ்**

*பரந்த புல்வெளியினில் மேயும்*
*எருதினைப் போல்*
*தளைகளற்றவன் என்றுதான்*
*எண்ணியிருந்தேன்.*
*கல்முனைக் கயிறு கழுத்தையறுக்க*
*புரிந்தது என் சுதந்திரத்தின் நீளம்*

**ஜி.சிவக்குமார்**



# அனுப்பப்படாத கடிதம்...

கடைக்கு
போவதாக
கத்திச்சொல்லியபடியே
சைக்கிளை
எடுத்திருக்கிறேன்..
உனது அம்மா
இரும்புக்கேட்டிற்கு வெளியே
தலையை நீட்டி,,
கொத்தமல்லித்தழை
வாங்கிவரச்சொன்ன
அதிசயம்..
மீண்டும்
நிகழாதாவென்று..

இரவல்
சர்க்கரை
வாங்குவதற்காக,
நீ
எனது
வீடு
வருவதாக
சொன்னதிற்கே..
எங்கள்
குளியலறை
கதவின்..
தாழ்ப்பாளை
சரிசெய்து
வைத்திருக்கிறேன்..

உன்வீட்டு
வாசலில்,,
காயவைக்கப்படுபவை
எவையானாலும்..
அங்கே
காகம்
விரட்டும்
பொம்மை
மட்டும்,,
நானாகி இருக்கிறேன்,,

உனது
வீட்டிற்குள்
பந்தே
விழாதவாறு
நடந்து
முடிந்த,
நடுத்தெரு
கிரிக்கெட்டில்
நான்
மட்டும்,,
தோற்றவனாகி
இருக்கிறேன்..

உனது
இனிஷியல்
போட்ட
குடமருகே,,
எனது குடத்தை
வைப்பதற்கான
போராட்டத்தினால்..
பலமுறை
தெருக்குழாயில்
இருந்து,
நீரே
பிடிக்காமல்
திரும்பிருக்கிறேன்..

எனது
படிப்பு மறந்து,,
நீ
விரும்பி
வளர்க்கும்
பூச்செடியின்
அருகில்
மட்டும்,,
அவ்வப்போது
யாருடைய
ஆட்டுக்குட்டியையோ
மேய்த்திருக்கிறேன்..

அந்த
கனமான
கட்டிலை,,
ஏற்றிவிட்டதற்கு
நீ
கன்னக்குழி தெரிய
நன்றி
சொல்லிய பிறகும்..
கொஞ்சம்
தயங்கித்தான்
காதலை
சொல்லிக்கொண்டு
இருக்கிறேன்..
உனது
காலி செய்யப்பட்ட
வீட்டை பார்த்து....!

**கவிதை மொழியன்**

.

மழை
யாருக்கு எப்படியோ

என்னைப் பொறுத்து
அது ஓர் நினைவுக் கிளர்த்தி

புறச் சத்தங்களைத் தின்று
'ஜோ ......வெனப் பெய்யும்
அதன் உக்கிர மௌன சப்தம்
மனதின் ஆழ வேர்களை
உசுப்பும் பேராண்மை கொண்டது

என் இளம் வயது காதலை
அதை அவள்
அங்கீகரித்த சிலிர்ப்பு
நொடிகளை

பின்னொரு நாளில்
பூங்காச் செடி மறைவில்
பயந்து பயந்து
பகிர்ந்து கொண்ட
முதல் முத்தத்தின் திளைப்பு தருணத்தை

அலைபேசி அலைபேசி
மெச்சி மெச்சி
வளர்த்த காதல் நாட்களை

மறுபடி
வீட்டில் பெண் பார்க்கிறார்கள்
என
சொல்லிக் குமுறி
அவள் அழுத
வேடியப்பர் கோவில்
புன்னை மர நிழலடியை

எல்லாம் முடிந்து

அவள் முறைப் பையனை
மணந்து புகுந்தகம்
புறப்பட்ட போது
என் நிமித்தம்
அவள் உகுத்த
கண்ணீர் கணங்களை

சில வருடங்கள் கழிந்து

தன்
மூன்று பிள்ளைகளோடு
ஓர் கல்யாண வீட்டில்
அவளைக் கண்ட போது

பின்
சாப்பிட்டு கையலம்பும்
பொழுதில்
எனை நெருங்கி
எனக்கு மட்டும்
கேட்கும் ஒலியளவில்

" ப்ளீஸ் எனக்காக நீ கல்யாணம்
பண்ணிக்கப்பா " என்றதும்
அப்போது
அவள் கண்கள் வெடித்து
ஒழுகியதும் ..

இப்படி ... இப்படியாக

மழை எனக்கு ஓர்

நினைவுக் கிளர்த்தியாக ..
இன்று வரை
எப்போது பெய்தாலும் ..

துருவன் பாலா

இருண்டக் காடொன்றில்
தனித்துவிடப்பட்ட
குழந்தை நான்..
தூரத்தில் ஒளிறும்..
உன் தேடலோசைகள்..
தடைபடும் போதெல்லாம்..
மௌனங்களும் கூட..
அச்சுறுத்துகிறது.

என்னை நீ தேடுகிறாய்..
உன் தேடலை
நான் தேடிக்கொண்டிருக்கிறேன்.

படரந்து கிடக்கும்
சிறுபூக்களின் வாசங்களில்..
உன் மேனியின் சுகந்தத்தை
நாசிகள் தேடித்தேடி..
ஏமாற்றங்களை
முகர்கின்றது..

பாவத்தின் தீப்பந்தங்களில்..
எரிந்துக் கொண்டிருக்கும்
கானகத்தில்..
இருளாகிக் கொண்டிருக்கிறது
வழித்தடங்கள்..

எரியும் கானகத்தின்
வெளிச்சத்தில்..
என்னை நீ.. அறிவாய் என்றே..

சுட்டெரிக்கும் தழலருகே..
காத்துக் கொண்டிருக்கின்றேன்..
சாம்பலாகிப் போவதற்குள்..
மீட்டெடுப்பாயா நீ..??

மின்னல் வெளிச்சங்களில்
தடம் நகர்கின்றேன்..
தூரத்தில் ஒலிரும்
உன் தேடலோசைகளை..
விழுங்கிக் கொண்டிருக்கின்றன
மின்னலை ஒட்டிய
பேரிடி முழக்கங்கள்..

அந்தோ..அப்பேரிடியில்
செவிடாகிப்போகும் காதுகளை..
மின்னல் விழுங்க காத்திருக்கும்
பார்வைகளை..
எப்போது மீட்டெடுப்பாய் நீ

கானகத்தில்
தனித்து விடப்பட்ட குழந்தை நான்..
மண்டியிட்டு..
உன் பாதச்சுவடுகளைத்..
தேடித் தவழ்கிறேன்
நிச்சயம்
என் விம்மல் சப்தங்களை..
செவிமடுப்பாய் நீ..

உலர்ந்துக் கொண்டிருக்கும்
என் கண்ணீர்துளிகளை..
இருளுக்குள்..
விதைத்துக் கொண்டே நகர்கிறேன்..
திவலைகளில்
ஒளிர்கின்றது..
உன் புன்னகைப் போரொளி..
மெல்ல.. இருளின்
திரையகற்றுகிறது...
கருத்த இக்கானகம்.

சிந்தா

## விருந்து

குப்பைத்தொட்டிகளின்
வயிற்றை நிரப்பிவிடுகின்றன
எச்சில் இலைகளில்
மிச்சம் வைத்த உணவுகள்.

நிலாரவி.


41st YEAR
சென்னைப் புத்தகக் காட்சி
CHENNAI BOOK FAIR 2018
BAPASI
படைப்பு குழுமம்
இடம் :—
செயிண்ட் ஜார்ஜ் ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப் பள்ளி
(பச்சையப்பன் கல்லூரி எதிரில்) அமைந்தகரை சென்னை
பார்வை நேரம்:—
விடுமுறை நாட்கள் காலை 11,00 மணி முதல் இரவு 9,00 மணி வரை
வார நாட்கள் மதியம் 2,00 மணி முதல் 9,00 இரவு மணி வரை
படைப்பு பதிப்பகம்
படைப்பு பதிப்பக வெளியீடுகள்
அரங்க எண் 682
வளர்வோம் வளர்ப்போம்